**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**S.C.No.138/2013**

Date: 27.02.2024.

**PW-6: ஜோதிவேல்**

சாட்சி இன்று மீண்டும் மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் 1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**A1 to A3, A5, A6, A7, A9, A13, A14 to A18 present. A8 and A11 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed.**

**1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ சமயத்தில் நான் மதியழகன் வீட்டுபக்கம் போகவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் மதியழகன் என்பவரது வீடு நான் சொல்லக்கூடிய இடத்தில் இல்லை என்றாலும், நான் மதியழகன் வீட்டு வாசலில் நின்று பேசிக்கொண்டிருந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. நான் வங்குடி கிராமத்தில் கீழதெருவில் வசித்து வருகிறேன். மேலத்தெருவில் வசிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் விவசாய கூலி வேலை செய்கிறேன். நான் சம்பவ தினத்தன்று வேலைக்கு போகவில்லை என்று சாட்சி சுயமாக கூறுகிறார். சம்பவதினத்திற்கு முந்தைய நாள் நான் எங்களது கிராமத்திற்கு அருகிலுள்ள பாப்பாகுடி என்ற கிராமத்திற்கு விவசாய வேலைக்கு போயிருந்தேன். அந்த கிராமம் எங்களது கிராமத்திலிருந்து 3 கி.மீ தொலைவில் இருக்கிறது. நான் வழக்கமாக காலை 5.00 மணிக்கு வேலைக்கு போவேன். பிற்பகல் 12.00 மணிக்கு எனது வேலையை முடித்துவிடுவேன்.

சம்பவதிற்கு முதல்நாள் நான் பாப்பாகுடியிலுள்ள பழனி என்பவரது தோப்பிற்கு வேலைக்கு போயிருந்தேன். என்னுடன் பாப்பாகுடியை சேர்ந்த மற்ற நபர்கள் வேலைக்கு வந்திருந்தார்கள். அவர்களின் பெயர்கள் என்னவென்றால் ஒருவரது பெயர் செந்தில். மற்றவர்களின் பெயர்கள் எனக்கு தெரியவில்லை.

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவதினத்தன்று காலை 5.00 மணிக்கு நான் வேலைக்கு போய்விட்டு, பிற்பகல் 2.00 மணிக்கு தான் ஊருக்கு திரும்பினேன் என்றாலும், எனவே நான் முதல்விசாரணையில் சொன்னதுபோல் எந்த ஒரு சம்பவத்தையும் நேரில் பார்க்கவில்லை என்றாலும், நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், போலிசார் சொல்லிகொடுத்து அதனடிப்படையில் பொய்யான சாட்சியம் சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.